‘ஓம்’

# “அமுதமழை பொழியும் சுதா ரகுநாதன்”

நாற்றிசையும் புகழ் பரப்பிய
இசை அரசி எம். எஸ். ஸின்
“காற்றினிலே வரும் கீதம்”
“ராக மாலிகா” வில்
தேனாய் பாகாய் எவர்க்கும்
தெவிட்டாத தெள்ளமுதாய்,
கானாமிருதமாய்த் தந்தார்
சுதா ரகுநாதன்.

சங்கீத சாகரத்தில்
மங்காத முத்தெடுத்து,
தங்கத் தட்டில் இட்டு
ஒய்யாரமாய்த் தருவார்,
பரம்பரா பட்டுருத்தி
பாரம்பரிய இசை பாடும்,
அரங்கம் பல கண்ட
‘அரங்க நாயகி’.

சுதாவிடம் இசை உண்டு
மென்னகை உண்டு,
சதா சாதகம் செய்யும்
உழைப்பு மிகவுண்டு,
கலைமகள் நல்கும்
அருளும் உண்டு,
கலை உலகம் தரும்
கணிப்பும் உண்டு.

இராக தாள பாவங்கள்
பக்குவமாய் இணைந்து,
சுருதி சுத்தமாய் அபூர்வராகங்களில்
அனாயாசமாய் சஞ்சரித்து,

அருமைக் கிருதிகளைத் தேர்ந்து
அமுத மழை பொழிபவரைக்
குருவாகக் கொள்பவர் பலர்
இரசிகர்கள் பல்லாயிரவர்.

நுண்ணிய இசை ஞானம்
சுர ஞானம் லய ஞானம்,
பண்பட்ட சாரீரம்
எண்ணற்ற பட்டங்கள்,
பெண்ணினம் பெருமையுறும்
பெயரும் புகழும்,
மண்ணுலகில் எய்தியவர்
‘சுதா ரகுநாதன்.’

சங்கீத சாம்ராஜ்யத்தில்
“இன்னிசை அரசி”யாக,
மங்காத புகழோடு
மாறாத இசையோடு,
எங்கும் எவரும் எப்போதும்
எண்ணியே போற்றிட,
பண்ணின் நேர் மொழியாள்
பல்லாண்டு வாழியவே.

15. 1. 2007. “பாரதிப்ரியன்”
(ப. சிவஞான சுப்பிரமணியம்)
பாரிஸ், பிரான்ஸ்.

